மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

முன்னிலை:- திருமதி.N.ரேணுகா., பி.ஏ., பி.ல்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சூலூர்
2023 ஆம் ஆண்டு, ஜுலை திங்கள் 26 ம் நாள் புதன்கிழமை

இடை மனு எண்.4/2023

அசல் வழக்கு எண்.217/2022

1. நாச்சம்மாள்
2. சொக்கநாதன்
3. திருமலைசாமி
4. நாராயணன்
5. வெங்கடாசலம் ...மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

//எதிர்//

அருள்பிரகாசம் ...எதிர்மனுதாரர்/வாதி

இந்த வழக்கானது 11.07.2023 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.கனகராஜ், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

எதிர்மனுதாரர்/ வாதியின் வழக்கை வழக்கு மூலம் இல்லாத காரணத்தால் வழக்குரையை நிராகரித்து மனுதாரர்கள்/பிரதிவாதிகளது வாழ்வாதாரத்திற்கும் உயிருக்கும் உத்திரவாதம் அளிக்க கோரியும் கட்டளை 7 விதி 11 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:

1.1. தாவா சொத்து மனுதாரர்களுக்கு பத்திர எண்.1480/1936 ன் படி க.ச.எண்.59/3 ல் ஏ.1.57 சென்ட் பூமியும், பத்திர எண்.390/1937 ன் படி

க.ச.எண்.59/2 ல் ஏ.1.26 செண்ட் பூமியாக மொத்தம் ஏ.2.83 செண்ட் பூமி உள்ளது. இதன் ரோடு சுமார் 70 அடி மட்டுமே. பத்திர எண்.1480/1936 ல் பாதை உள்ளதாக காட்டி எந்தவிதமான வாசகங்களும் இல்லை.

1.2. தாவா சொத்தில் மனுதாரர்கள் சுமார் 50 செண்ட் அளவுள்ள பூமியை ஒவ்வொருவரும் விவசாயம் செய்தும் கூலி வேலை செய்தும் ஜீவனம் பெற்றுவருகிறார்கள். ரோடு முகப்பில் உள்ள 70 அடியில் சுமார் 8 முதல் 10 அடி அகலமுள்ள பாதை விட்டு மனுதாரர்கள் அவர்களது பூமிக்கு சென்று வருகிறார்கள்.

1.3. எதிர்மனுதாரர் பாகசான எண்.1044/1941 ன் படி க.ச.எண்.40 பூமிக்கு செல்ல, க.ச.எண்.59/3, 4, 5 மற்றும் க.ச.எண்.40/1, 2 காலைகளின் வழியாக வண்டி தடம் செல்வதாகவும் மேலும் பெரியநாயகி அம்மாள் பங்கு பூமியில் தெற்கோட்டில் கிழமேலாகவும் மேற்படி காலையில் "A" பாகத்தில் கிழகோட்டில் தென்வடலாகவும் C பாகஸ்தர் (எதிர்மனுதாரர் தரப்பு) வண்டி, கால்நடை வகையறாக்கள் ஓட்டியும், தடம் நடந்து கொள்ளவேண்டியது உள்ளதாக எதிர்மனுதாரர் குறிப்பிடுகிறார். இதில் குறிப்பிட்டுள்ள பெரியநாயகி அம்மாள் பங்கு பூமி செஞ்சேரிமலை - பொள்ளாச்சி ரோட்டில் சாமியார் மடம் தோட்டத்திற்கு அருகில் இருந்து க.ச.40 க்கு வரவுள்ள பாதை என்றும் பத்திர எண்.1044/1941 லும், எதிர்மனுதாரரின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1.4. இதில் எதிர்மனுதாரருக்கு க.ச.எண்கள் 49/5, 43/2 மற்றும் 40 நெ.காலைகளில் பூமி உள்ளதாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாக சாசன எண்.1044/1941 ல் மாஜி மணியம் இல்லாத தடபாத்திய உரிமையை தன்னிச்சையாக எழுதி வைத்துக்கொண்ட விவரம் மனுதாரர்களுக்கு இப்பொழுதுதான் தெரியவந்துள்ளது. இந்த எதிர்மனுதாரர் க.ச.எண்கள் 59/5, 43/2 மற்றும் 40 இந்த சொத்துக்களில் மனுதாரர்கள் பாகத்தில் வண்டி தடம் கண்டு எழுதப்பட்டுள்ளதா?

1.5. இந்த மனுதாரர்கள் ரோடு முகப்பில் இருந்து கிழபுறம் சுமார் 150 அடி தூரத்தில் PAP வாய்க்கால் தொடங்கி தெற்கு நோக்கி சென்று சுமார் 300

அடியும் மேற்கு நோக்கி வளைந்து திரும்பி மனுதாரர்கள் பூமியின் தென்புற பகுதியில் கடந்து செல்கிறது. இந்த PAP கால்வாய் பச்சார்பாளையம் - செஞ்சேரிமலை தொடங்கும் இடத்தில் வாய்க்காலை ஒட்டி ஒரு தடம் சுமார் 12 அடி வாய்க்காலை ஓட்டியே சென்று மேற்கு நோக்கி மனுதாரர்கள் பங்குக்கு அடுத்து செல்கிறது இந்த வழியும் உபயோகத்தில் இருந்து வருகிறது. இதன் மூலம் மனுதாரர்கள் பூமிக்கு செல்லாமல் எதிர்மனுதாரர் பூமிக்கு செல்ல முடியும். அதே போல் பச்சார்பாளையம் - செஞ்சேரிமலை செல்லும் ரோட்டில் சிறிது தூரத்தில் பேங்க் ஆப் பரடோ வங்கி உள்ளது அதையொட்டி ஒரு வழியும் எதிர்மனுதாரர் பூமிக்கு செல்ல முடியும். இந்த வங்கியை அடுத்துள்ள இடம் மற்றும் அதை சுற்றியுள்ள சில ஏக்கர் புறம்போக்கு பூமிகளையும் வழித்தடத்தையும் மூன்றாம் நபர்கள் சட்ட விரோதமாக சுவாதீனத்தில் வைத்துள்ளனர் மற்றும் பத்திர எண்.1044/1941 ல் கூறியுள்ள பெரியநாயகி அம்மாள் பங்கிலிருந்து செஞ்சேரிமலை பொள்ளாச்சி ரோட்டில் ஒரு வழியும் உள்ளது.

1.6. எதிர்மனுதாரர் வேறு பாதை இல்லை என்பது அப்பட்டமான பொய் க.ச.எண்.59/3 மற்றும் க.ச.எண்.59/2 காலைகள் மனுதாரர்களுக்கு சொந்தமானதாகும். எதிர்மனுதாரர் க.ச.எண்.59/3 மற்றும் சில காலைகளில் வண்டிதடம் 100 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளதாக கூறுவது தவறு. க.ச.எண்.59/3 மற்றும் 59/2 காலைகளில் மனுதாரர்கள் உபயோகத்திற்கான தனிப்பட்ட பாதை மட்டுமே உள்ளது. எதிர்மனுதாரர் மற்ற க.ச.எண்கள் 59/4, 5 மற்றும் 43/1, 2 காலைகளில் வண்டி தடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளது எதிமனுதாரர் பங்காளிகளின் பூமிகளே.

1.7. கடந்த 31.10.2022 ம் தேதி எதிர்மனுதாரின் ஆட்கள் விவசாய பொருட்களை ஏற்றி வந்த தாவா வண்டிதடத்தை மனுதாரர்கள் தடுத்து விட்டதாக கூறியுள்ளார். ஆனால் உண்மையில் நடந்தது அன்றுதான் மனுதாரர்களின் தனிப்பட்ட பாதையில் எதிர்மனுதாரர் மற்றும் அவரது ஆட்கள் அத்துமீறி செல்ல முற்பட்டனர், மனுதாரர்கள் தடுத்ததால் எதிர்மனுதாரர் 2 ம் மனுதாரரை தாக்க முற்பட்டார். அதனால் காவல்

நிலையத்தில் புகார் அளிக்கும் நிலை ஏற்பட்டது.

1.8. மனுதாரர்களிடம் இருந்து ஏதேனும் ஒரு வகையில் தாவா சொத்தினை அபகரிக்கும் பொருட்டு எதிர்மனுதாரர் தவறான, பொய்யான சங்கதிகளை கூறி பொய்யான வழக்கை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. ஏனெனில் வழக்கிற்கான வழக்கு மூலமே இவ்வழக்கில் இல்லை. மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

<u>2). எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை சுருக்கம்:</u>

2.1. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இந்த மனுவினை அசல் வழக்கினை நிராகரிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல. 1936-ம் ஆண்டு பத்திரம் கந்தசாமி பெண் ஜாதி மருதக்காள் கிரையம் பெற்றது போல் உள்ளது. மேற்படி மருதக்காளுக்கும் மனுதாரர்களுக்கும் எவ்வித உறவு என மனுவில் குறிப்பிடவில்லை. மேலும் PAP வாய்க்காலை ஒட்டி தடம் இருப்பதாக கூறியுள்ளனர். வாய்க்காலை ஒட்டி உள்ள இடம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடம். அதில் யாரும் உரிமை கோரமுடியாது.

2.2. "10 வது பத்தியில் கடந்த 31.10.2022 ந் தேதி எதிர்மனுதாரரின் ஆட்கள் விவசாய பொருட்களை ஏற்றி வந்த தாவா வண்டித்தடத்தை மனுதாரர்கள் தடுத்து விட்டதாக கூறி உள்ளார்கள். ஆனால் உண்மையில் நடந்தது அன்றுதான் மனுதாரர்களின் தனிப்பட்ட பாதையில் எதிர்மனுதாரர் மற்றும் அவரது ஆட்கள் அத்துமீறி செல்ல முற்பட்டனர், மனுதாரர்கள் தடுத்ததால் எதிர்மனுதாரர் 2 ம் மனுதாரரை தாக்க முற்பட்டார் என கூறி உள்ளனர். இதில் இருந்தே 31.10.2022 ந் தேதி தாவா தடத்தில் பிரச்சனை ஏற்பட்டது தெளிவாகிறது. அதன் பின் வழக்கு மூலமே இல்லை என இந்த மனுவினை பொய்யாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

<u>**3).** தீர்வுக்குரியப் பிரச்சனை**:**</u>

கட்டளை 7 விதி 11 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் தாக்கல்

செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**4).** <u>பிரச்சனைக்குத் தீர்வு</u>**:**

4.1. அசல் வழக்கு வாதியால் தாவா சொத்து செல்லும் வண்டித்தடமான பி அயிட்ட சொத்தை பிரதிவாதிகள் எவ்வித இடைஞ்சல், தடங்கல் செய்யக்கூடாது என நிரந்தர தடையுறுத்துக் கட்டளை கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு பி அட்டவணை சொத்து சுல்தான் பேட்டை பஞ்சாயத்து மலைப்பாளையம் கிராமம் புல எண்.59/3, 59/4, 43/1, 43/2 காலைகளில் கிழகோட்டில் தென்வடலாக செல்லும் சுமார் 15 அடி அகல வண்டித்தடம். மேற்படி வண்டித்தடத்திற்கு மூல ஆவணங்களாக 26.06.1941 தேதியிட்ட பாகபிரிவினை ஆவணமும் 21.06.2007 தேதியிட்ட பாகபிரிவினை ஆவணமும் காட்டப்பட்டுள்ளது.

4.2. பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி பூமிகளின் வழியாக பாதைகள் இல்லாத நிலையில் 26.06.1941 பாக ஆவண எண்.1044/1941 ல் தடபாத்தியம் உள்ளதாக அவர்களாகவே எழுதி கொண்டுள்ளனர் என்றும் மேற்படி புல எண்.49/5, 43/2, 40 ஆகிய காலைகளிலும் 59/3, 4, 5 மற்றும் 40/1, 2 காலைகளில் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித தடபாத்தியமும் இல்லை என்றும், வழக்கெழு மூலமே இல்லாத சமயத்தில் புதியதாக வண்டிதடத்தில் அத்துமீறி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நுழைந்ததாக வழக்கெழு மூலம் ஏற்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றும், வழக்கெழு மூலமே ஏற்படாத நிலையில் கற்பணையாக ஏற்பட்டுள்ள வழக்கெழு மூலத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கை கட்டளை 7 விதி 11 ன் கீழ் நிராகரிக்க வேண்டும் என்றும், வாதிக்கு வேறு மூன்று வழிதடங்கள் தாவா A அட்டவணை சொத்தை அடைய தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது என்றும், குறிபிட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.3. மேற்படி வழக்கெழு மூலம் உண்மையானதா? இல்லையா? என்பது பற்றியும், வாதிக்கு தாவா சொத்தை அடைய வேறு பாதைகள் உள்ளது என்பது பற்றியும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7

விதி 11 ன் கீழ் தீர்மானிக்க முடியாது. முழுமையான வழக்கு விசாரணைக்கு பின்னிட்டு தான் மேற்படி சங்கதிகள் பொருத்து தீர்மானிக்க முடியும்.

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023 ம் ஆண்டு ஜுலை திங்கள் 26 ம் நாள் புதன்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N RENUGA
Digitally signed by N RENUGA
Date: 2023.07.29 16:37:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை:</u>

இல்லை

N RENUGA
Digitally signed by N RENUGA
Date: 2023.07.29 16:37:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

Draft/Fair order
IA.4/2023 in
OS.217/2022 in
Dated:26.07.2023
DMC, Sulur.